Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1	சௌமியஹூ கார்த்திகை மூ 1உ	Part. 8
புத்தகம். 1	1909ஹூ நவம்பர்மூ 16உ	பிரதி. 8

Contents

Aquatic weeds in paddy lands 113
Rinderpest 116
Garden soils 118
Old sayings 120
Single planting of paddy seedlings by Mr. H. C Sampson, Dy. Director of Agriculture 121
Waste from neglect to preserve urine 123
Necessity for change in Agricultural practices ... 125
Bezwada paddy cultivation 127
Month's operations ... 128
News and Notes 128

பொருளடக்கம்

நன்செய்நிலங்களில் உண்டாகும் வேப்பம்பாசி ... 113
வெக்கை ... 116
தோட்டக்கால் நிலங்கள்... 118
பழமொழிகள் ... 120
நெல் ஒற்றை நாற்று நடுகை 121
சிறுநீர் சேகரிக்காததாலுண்டாகும் நஷ்டம் ... 123
கிருஷிப்பழக்கங்களை மாற்றல் 125
பெஸ்வாடாவில் நன்செய் சாகுபடி ... 127
கார்த்திகை மாதத்திய பருவங்கள் ... 128
சமாசாரக்குறிப்புகள் ... 128

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்கு பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்த தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுபபப்டும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதை கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை மாதத்து சஞ்சிகை (அதாவது முதல் பிரதி) செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு முதல்பிரதி கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்கவேண்டுமானல் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்

சங்கீதம்!!! சங்கீதம்!!!

"ஹார்மோனியம்" சுதாவில்கற்க நல்ல தருணம்! பல்லவிக்கு ரகசிய வழி வெளியாகிவிட்டது. ஸங்கீதானுபவ ஸார ஸங்கிரகம்

1. இப்புத்தகம் 2 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டிருப்பதுடன் அவசியமான இடங்களுக்குத் தெலுங்கு எழுத்துக்களையும் "ஹார்மோனியம்" சுதாவில் பழகிக்கொள்ளுவதற்காக இங்கிலீஷ் அடையாள எழுத்துக்களையும் உபயோகித்திருக்கின்றன.

2. I-வது பாகத்திலுள்ள முக்கிய விஷயங்களாவன:—(1) சுராவளி முதலியன, (2) தாளங்களுடன் சுரப்படுத்திய அநேக கீர்த்தனைகள், வர்ணங்கள், நோட்டு சுரங்கள், (3) மேள கர்த்தா ஜென்னிய ராகங்கள் முதலியன.

3. II-வது பாகத்திலுள்ள முக்கிய விஷயங்களாவன:—(1) தாள லக்ஷணங்கள், (2) தற்கால அனுபவ ரகசிய வழிப்படிக்குள்ள பற்பல ஜதிகளின் ஜாதிபேதக் கணிதங்கள், (3) உதாரணமாக சில கீர்த்தனை பல்லவிகளுக்கு தாளக்காலங்களுடன் ஜதிஸ்வரங்கள் முதலியன.

காலிகோ பைண்டு 1-ம் பாகம் தனி விலை ரூ. 1-4-0, 2-ம் பாகம் தனி விலை ரூ. 2-4-0, ஒரேதடவையில் 2 பாகத்திற்கும் ஆர்டர் செய்வோருக்கு விலை ரூ. 3. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ஆர்டர் செய்யும்பொழுது தயவு செய்து இந்த பேப்பரின் பெயரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,

ஸங்கீத வித்வான், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 புத்தகம் 1	சௌமியஹு கார்த்திகைமீ 1உ 1909ஹு நவம்பர்மீ 16உ	No. 8 பிரதி 8

நன்செய் நிலங்களில் உண்டாகும் வேப்பம்பாசி

AQUATIC WEEDS IN PADDY LANDS

இவ்விராஜதானியின் தென் ஜில்லாக்களில் நன்செய் சாகுபடியில் அனுபோகமுள்ள ஒவ்வொருவருக்கும் வேப்பம்பாசி யென்பது எப்படிப்பட்டதென்று தெரியும். சில ஜில்லாக்களில் தண்ணீர் எளிதில் வடியாதவிடங்களில் இந்தப் பாசியுண்டாகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர் வடிவு சரியாய் இயல்பிலேயே அமைந்திருக்கும் மணற் பாங்கான நன்செய்களிலுங்கூட இது உண்டாகிறது. நன்செய் நிலங்களில் தண்ணீர் அநேக நாட்களுக்கு அதிகமாய்க் கட்டிவைப்பதால் இது உண்டாகிறதென்பது அனேக நிபுணர்களுடைய அபிப்பிராயம். ஒருவயலில் கட்டிய தண்ணீரை அடிக்கடி வடித்து புதிதாய்த் தண்ணீர் கட்டிவரும் நிலங்களிலும் இது உண்டாகாமலிருக்கவில்லை. களர் நிலங்களில் இந்தப் பாசி விசேஷமாய் உண்டாகிறது. இது முதல் முதல் உண்டாவதற்குக் காரணம் இன்னதென்று தெளிவாய்த் தெரியாவிட்டாலும், அதனாலுண்டாகும் கெடுதிமட்டும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியவரும். ஒரு வருஷத்தில் ஒரு நிலத்தில் இந்தப்பாசி எந்தக் காரணத்தையிட்டாவது உண்டாகிவிட்டால், அதை நாம் நிர்மூலமாக்கும் வரையிலும், வருஷா வருஷம் அது உண்டாகிப் பரவிக்கொண்டே யிருக்கும். அந்த

வயலிலிருந்து தண்ணீர் வடியும் வயல்களிலும் இந்தப்பாசி யுண்டாவதுண்டு. அப்படிப் பக்கத்து வயல்களில் வேப்பம்பாசி படராமலிருக்கும்படி அவ்வயல்களில் அடிக்கடி களையெடுக்கச் செய்து அதிகமான உரம்போட்டு வருகிறார்கள்.

இதைச் சிலவிடங்களில் சங்கிலிப்பாசி யென்று சொல்லுவார்கள். சில விடங்களில் இது பச்சையாயும், சிலவிடங்களில் வேறு நிறமுடையதாகவும் வெவ்வேறு விதமாயிருக்கும். இது படர்ந்துவிட்டால் எத்தனை முறை களையெடுத்தாலும் இதை நிர்மூலப்படுத்த முடியாது. அது மறுபடியும் மறுபடியும் உண்டாவது வெகு ஆச்சரியமாயிருக்கும். ஒரு வயல் ஐந்தாறு மாதங்களுக்குத் தரிசு கிடந்திருந்தாலுங்கூட அதில்சேறு கலக்கி நடும்போது எப்படியோ அது உண்டாகும். கோடை யுழவுசெய்து காய்ந்த நிலங்களிலும் இப்படியே இந்தப் பாசியுண்டாக நாம் கண்டிருக்கிறோம். அதன் நுண்ணிய விதைகள் கண்ணுக்குத் தெரியாமல் பூமியில் தங்கியிருந்து அவைகள் முளைப்பதற்கேற்ற சந்தர்ப்ப முண்டானவுடனே முளைக்கின்றன.

இந்தப்பாசி யுண்டான நிலத்தில் நெற்பயிர் சரியாய் உண்டாகாது. இதற்குக் காரணமென்னவெனில் பயிருக்குவேண்டிய மண்ணுணவை இந்தப் பாசியானது சாப்பிட்டு விடுகிறது. நிலத்தில் தண்ணீர் புகுந்து அடி மண்ணின் கீழிறங்கி வடியவொட்டாமல் பாசியானது நிலத்தின் மேல் மூடிக்கொள்ளுகிறது. அதேவிதமாக நிலத்தினுள்ளே காற்றும் புகவொட்டாமல் தடுத்து விடுகிறது. இந்த விதமாகப் பயிருக்கு எந்தெந்த வழியில் உணவுகிடைக்குமோ அந்தந்த வழிகளை யெல்லாம் அடைத்துவிடுகிறது. ஆகையால் அந்தப் பயிர் சரியாய் வளர்ந்து மேல்வராமல் அதில் சரியான மாசூல்கிடைப்பதில்லை.

இந்தப் பாசிக்கு அனேகவிடங்களில் அனேக விதமான பக்குவங்கள் செய்கிறார்கள். சில ஊர்களில் இந்தப் பாசியுண்டான உடனேயே வேப்பம் புண்ணாக்கை வாங்கிப்பொடித்து நிலத்தின் மேல் தெளித்துக் கொஞ்சமாய்த் தண்ணீர் கட்டிவைக்கிறார்கள். இந்தப் பக்குவத்தினால் இந்தப் பாசி அனேகமாகக் குறைவுபடுகிறது. இதனாலேயே இதற்கு வேப்பம்பாசியென்று பேருண்டாயிற்று போலும்.

சில ஜில்லாக்களில் வேப்பம்பாசியுண்டாவதற்குக் காரணம் அந்த நிலங்களுக்கு எருவாக வேப்பம் புண்ணாக்கை அதிகமாய்ப் போடுவது தான் என்று அனேகர் சொல்லுகிறார்கள். ஆனால் இது உண்மையான காரணமல்ல.

வேறு சில விடங்களில் தேங்காய் மேலிருக்கும் மட்டையை

உறித்து அவைகளை இந்தப் பாசியுண்டான வயலில் பலவிடங்களி லும் புதைத்துவைக்கிறார்கள். அந்த வயலுக்குத் தண்ணீர்பாயும் வாய் மடைத்தலையிலும் புதைத்து வைப்பார்கள். ஆனால் இதனால் பாசி அனேகமாய் விலகுவதில்லை.

சில ஜில்லாக்களில் பயிர் அறுவடையானவுடன் அறுதாள்களை அடிக்கடி கால் நடைகளைவிட்டு மேய்த்தால் இந்தப்பாசி எடுபட்டுப் போமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இது ஒரு மூட நம்பிக் கையேயொழிய வேறல்ல.

எல்லாவற்றிற்கும் சிலாக்யமான பக்குவம் எதுவென்றால் ஆடா தோடை என்னும் காட்டுச்செடியின் தழையை வெட்டிக் கொண்டு வந்து நடுகை செய்வதற்கு முன் நிலத்தில் போட்டு மிதித்துவிட் டால் இந்தப் பாசியுண்டாகாமலே தடுத்து விடும். ஒருவேளை இப் படி முன்கூட்டிப் போடத் தவறிவிட்டால் பயிரின்ஊடே களையெடுக் கும்போது இந்தத் தழைகளைப்போட்டு மிதித்துவிட்டாலும் பாசி எடுபட்டுப் போகும். இது நாம் அனுபவ பூர்வமாய்க் கண்டறிந்த பக்குவம். இதைப் பரிக்ஷிக்க யாராவது விரும்பினால் ஒருதொட்டி யில் தண்ணீர் விட்டு அதில் வேப்பம் பாசியையும் போட்டு ஆடாதோடைத் தழையை இடித்துச் சார் பிழிந்து, அந்தப்பாசியில் கலந்தால் அது நிர்மூலமாவது தெரியும்.

இந்த ஆடாதோடைச் செடியை எல்லாவிடங்களிலும் வேலிக ளில் வைத்துண்டாக்கலாம். வேப்பம்பாசி யுண்டாகாத வயல்களுக் கும் இந்தத் தழை நல்ல தழை யெருவாக உபயோகப்படும். சில ஜில்லாக்களில், உதாரணமாகத் தஞ்சாவூர் ஜில்லாப் பக்கங்களில், வயல்களுக்கு ஊடேயூடே அகலமான வரப்புகளைக் கட்டிவைக்கி றார்கள், இவைகளில் தற்காலத்தில் பூசுணி, கொத்தவரை முதலிய செடிகளைப்போட்டு வருகிறார்கள். அதிலிருந்து நிலச்சுவான் சரி யான பலன் அடைவதுமில்லை. அந்த விடங்களில் இந்தச் செடி களை நட்டுவைத்தால் அவைகள் நன்றாய் வளர்ந்திருக்கும். கிருஷி கருக்கு அவசியமான போது அந்தத் தழையை வெட்டி உபயோ கிக்கலாம். இந்தச் செடிக்கு பூச்சி முதலிய நோய் நொடிகளைப்போ க்கும் குணமிருக்கிறதென்று நமது கிருஷிகரில் சிலருக்குத் தெரிந் திருக்கிறது. இந்தக் காரணத்தினாலேயே கொடிக்கால்களைச் சுற்றி லும் ஆடாதோடைச் செடிகளை வைத்துண்டாக்கி வருகிறார்கள். இந்தச் செடிகளைக்கொண்டு வந்து நட்டு விர்த்தி செய்வது மிகவும் எளிது. அதன் கிளைகளை வெட்டி அந்தத் துண்டுகளை நிலத்தில் நட் டுக் கொஞ்சம் தண்ணீர்விட்டு வைத்தால் போதுமானது. மழைகால த்தில் இப்படி நட்டுவிட்டால் வேறு பக்குவம் ஒன்று மில்லாமலே இது தானாய் உண்டாகும், ஆகையால் இம்முறையை எல்லாரும் கைக்கொண்டு பயனடைவார்களென நம்புகிறோம்.

வெக்கை

RINDERPEST

நமது தேசத்தில் கால் நடைகளுக்கு சாதாரணமாய் உண்டாகிற பிராணுபாயமான தொத்துவியாதிகள் அடியிற்கண்டவைதான்.

1. வெக்கை.
2. கால்நோய் வாய்நோய்.
3. மென்னை அடைப்பன்.
4. அடைப்பன்.
5. சப்பைநோய்.
6. தொத்துகிற சுவாசாசய அழற்சி.
7. செம்மரியாட்டம்மை.

இந்த வியாதிகளைப்பற்றிய விவரங்களையும் அவைகள் உண்டான உடனே கிருஷிகர் செய்யவேண்டிய காரியங்களையும் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய் எழுதிவருவோம். இந்தச் சஞ்சிகையில் வெக்கை என்னும் வியாதியைப்பற்றிய விவரங்களைத் தெரிவிப்போம்.

இந்தவியாதிக்கு வெதுப்பு, சரக்கழிச்சல், பிச்சைநோவு, அம்மை, குடிநோவு, தூக்கம், பெரியநோவு, பைச்சிநோவு, வசூரி என்று பற்பல விடங்களில் பற்பல பெயர்கள் வழங்குகின்றன. மலையாளத்தில் இதற்கு பேய, வசந்தரோகம் என்று சொல்லுகிறார்கள்.

இப்படிப் பற்பல இடங்களில் பற்பல பெயர்கள் வழங்கிவந்தாலும், அடியில் விவரிக்கப்படும் குறிகுணங்களினால் இந்தவியாதியை எளிதில் தெரிந்துகொள்ளலாம். இந்த வியாதியானது அசைபோடுகிற சகல பிராணிகளுக்கும் உண்டாகிறது. வெள்ளாடுகளும் மாடுகளும் இந்த வியாதியினால் ஏராளமாய் மடிகின்றன. செம்மறியாடுகளுக்கும் சில வேளைகளில் இவ்வியாதி யுண்டாகின்றது. ஆனால் செம்மறியாடுகள் இவ்வியாதியினால் அதிகமாய்ச் சீக்கிரத்தில் மடிவதில்லை. இவ்வியாதியானது ஒரு பிராணிக்கு சம்பவித்தால் பக்கத்திலிருக்கிற அசைபோடும் பிராணிகளுக்கெல்லாம் தொத்திவிடும். சில சமயங்களில வியாதிப்பட்ட பிராணிகளுக்குத் தீனி போடவாவது, தண்ணீர் வைக்கவாவது, அல்லது அவைகளின் சாணம் மூத்திரம் முதலியவைகளை அப்புறப்படுத்தவாவது போகிற வேலையாட்கள் தங்கள் தேகத்தைச் சுத்திகரித்துக்கொள்ளாமல் சுகமாயிருக்கிற வேறு பிராணிகளைத் தொட்டாலும் அவைகளுக்குத் தீனி போடவாவது தண்ணீர் காட்டவாவது வேறெந்தக் காரியத்துக்காவது அவைகளின் சமீபத்தில் சென்றாலும் அவ்வியாதி அந்தப் பிராணிகளையும் பிடித்துக்கொள்ளும். வியாதிப்பட்ட ஒரு பிராணிக்குப்போட்ட தீனியின் மீதத்தையாவது அது குடித்த தண்ணீரின் மீதத்தையாவது சுகமான பிராணிகள் தொட்டால் அவைகளுக்கும் அவ்வியாதி வந்துவிடும். வியாதிப்பட்ட பிராணிகளைக் கட்டியிருக்கும்

தொழுவுக்குச்சமீபமாக வேறுபிராணிகள்போனாலும்அவைகளுக்கும் அவ்வியாதி வந்துவிடும். இப்படி ஒரு பிராணியிலிருந்து மற்றொரு பிராணிக்குத் தொத்துந்தன்மை இவ்வியாதிக்கு விசேஷமாய் உண்டு. பிராணிகளின் இரத்தத்திலும் சதையிலும் ஒருவித விஷக்கிருமிகள் பரவி விர்த்தியடைவதனாலேயே இவ்வியாதி உண்டாகிறது. இவ்விஷக்கிருமிகளில் ஒன்று அல்லது இரண்டு முதல் முதல் ஒருபிராணியின் இரத்தத்தில் பிரவேசித்துவிட்டால் அங்கிருந்து பத்து, நூறு, ஆயிரமாக அதிசீக்கிரத்தில் பலுகிப் பெருகும். இப்படி மூன்றுமுதல் ஏழு நாள் வரையில் வெளிக்குத் தெரியாமல் கால் நடைகளின் சரீரத்தின் உள்ளிருந்தே இக்கிருமிகள் விசேஷமாய் விருத்தியடைந்து வந்து அப்பால் வியாதிக் குறிகளை வெளிப்படையாய்த் தெரியச் செய்யும்.

அப்படி முதல் முதல் தெரியுங் குறிகள் என்னவென்றால் (1) வியாதியுண்டான பிராணியின் சரீரத்திலுள்ள சூடு வர வர அதிகப்படுவது. கால் நடைகளின் சரீரத்தைத் தொட்டுப்பார்த்தால் உஷ்ணம் அதிகப்பட்டிருப்பது தானாகவே தெரியும். (2) வியாதிகண்ட பிராணியானது எப்போதுமிருப்பது போலல்லாமல் சற்று உற்சாகக் குறைவுள்ளதாய்த் தோன்றும். உடம்பு அடிக்கடி நடுக்கங்கொள்ளும். (3) தேகமெங்கும் மயிர் சிலிர்த்து நிற்கும்; வாயைத்திறந்து நாக்கைத் தொட்டுப்பார்த்தால் அதிகச் சூடாயிருக்கும். (4) வாயின்மேல் தாடையிலும், உதடுகளிலும், கீழ்த்தாடையிலுள்ளபல் ஈறுகளிலும், ஒருவிதமான சிவப்பு நிறமுள்ள புள்ளிகளும் குறிகளும் இருக்கும். வாயின் உதடுகள் இரத்தச்சுரப்பினால் சிவப்பாய் இருக்கும். (5) கண்கள் சிவந்திருக்கும். உதடுகள் வரண்டுபோயிருக்கும். சளி பிடித்திருக்கும்போது சாதாரணமாய் உண்டாகும் இருமல் போலல்லாமல் அடிக்கடி வரட்டிருமல்கள் உண்டாகும். (6) காதுகள் அடிக்கடி ஆடிக்கொண்டு நிற்காமல் தொங்கிக்கொண்டிருக்கும். (7) இவ்வியாதி யுண்டானவுடன் கால் நடைகளுக்கு மலச்சிக்கு இருப்பதாய்த் தெரியும். முக்கிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாணிபோடும். சாணியைக் கவனித்தால் அதில் சீதம் ஒட்டிக்கொண்டிருக்கும். (8) சரியானபடி தீனி தின்னாது. சிலசமயங்களில் தண்ணீரை அதிக ஆவலுடன் குடிக்கும். (9) முதுகிலும்முன் பின் சப்பைகளிலும் ஒரு வலிப்பு அடிக்கடி காணும். வரவர, முதுகு வில்போல் வளைந்து, நாலு கால்களையும் வயிற்றுக்குக் கீழாகக் கூட்டியதுபோல் நெருங்க வைத்துக்கொண்டு நிற்கும். (10)கால் நடைகள் சரியானபடி அசைபோடாது. அதிகத் தாமதத்துடனும் ஒழுங்கில்லாமலும் அசைபோடும். பல்லை நெற நெறவென்று கடிக்கும். அடிக்கடி கொட்டாவி விடும். (11) முதுகில் கையினால் அழுத்தினால் நோவிருப்பதாகக்காட்டும். (12) இரத்தநாடி படபடப்பாய் அடிக்கும்.

தோட்டக்கால் நிலங்கள்
GARDEN SOILS

தோட்டம் போட்டுப் பலனடைய நினைக்கும் ஒவ்வொருவரும் முதல முதல் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அது என்னவெனில் தான் பயிரிட நினைக்கும் நிலத்தின் தன்மையும் கூறுபாடும் எப்படிப்பட்டது என்று நன்ருய்ப் பரிசோதித்துக் கண்டறிவதுதான். நிலங்களின் குணகுணங்களில் அநேக பேதங்கள் உண்டு. ஒரே ஊரில் நூறு கெஜ தூரத்துக்குள் அனேக வேறுபாடுகள் நிலங்களில் காணப்படக்கூடும். ஒவ்வொரு விதமான மண்ணுக்கும் ஒவ்வொரு விதமான பருவம் செய்தால் சரியான பலன் கொடுக்கிறது. அதே பருவத்தை வேறு ஒரு மண்ணுக்குச் செய்தால் அனுகூலப்படுவதில்லை. ஆகையால் தோட்டப் பயிர்செய்வதில் அதிகமான பயன் பெறவேண்டுமானல் மண்ணின் தன்மைக்கும் கூறுபாட்டுக்கும் ஏற்றதான பக்குவங்களைச் செய்யவேண்டியது அவசியம்.

செழிப்பான நிலங்களில் அனேகமாய் மணல், களி, சுண்ணும்பு, மூலவர்க்கப் பொருள் கலந்திருக்கும். இவ்வஸ்துக்கள் வெவ்வேறு இடங்களில் கொஞ்சம் கூடியும் குறைந்துமிருக்கும். மணல் அதிகமாயிருந்தால் அதை மணல் நிலம் என்றும், களி அதிகமாயிருந்தால் அதைக் களிமண் நிலம் என்றும், சுண்ணும்பு அதிகமாயிருந்தால் சுக்கான்கல் நிலம் |என்றும், மூலவர்க்கப்பொருள் அதிகமாயிருந்தால் அதைக் கற்றை நிலம் என்றும் சொல்லுவார்கள். இவ்விதமாக மேற்சொன்ன வஸ்துக்களில் ஒன்றும் அதிகமாகாமல் சரியான விதமாய்க் கலந்திருக்கும் மண்ணுக்குப் பசளை மண் என்றுபேர். தோட்டம் போடுவதற்கு இந்தப் பசளைமண்ணே மிகவும் மேன்மையானது.

நிலங்களின் தன்மைக்குத்தக்கபடி அவைகளை உரப்பான நிலங்கள் என்றும், இலகுமண் நிலங்கள் என்றும், பிரிக்கலாம். களிமண் ஒருநிலத்தில் அதிகமாய்க் கலந்திருந்தால் அந்தமண் உரப்பாயும் கெட்டியாயுமிருக்கும். ஆகையால் அந்நிலத்தை உரப்பான நிலம் என்று சொல்லுவார்கள். ஒரு நிலத்தில் மணல் அதிகமாகக் கலந்திருந்தால் அதை உழுவது எளிதாயிருக்கும். அதனல் அதை இலகுமண் என்று சொல்லுவார்கள். மணல் பாங்கு நிலங்களை உஷ்ணபூமி யென்றும் சொல்வார்கள். ஏனெனில் அவைகளில் ஈரம் அதிகமாய் நீடித்துநிற்காமல் சீக்கிரத்தில் காய்ந்துபோகும். களிமண் அதிகமாய்க் கலந்திருக்கும் நிலங்களில் ஈரப்பதம் இருக்கும். ஆகையால் அவைகளைக் குளிர்ந்த நிலங்கள் என்றும் சொல்வார்கள். மணல் பாங்கு நிலங்களில் ஈரம் சீக்கிரத்தில் வற்றிப்போவதாலும் உஷ்ணமுண்டாவதாலும், அவைகளில்செய்யும் பயிர்கள் சீக்கிரத்தில் விளைவடையும். ஆனல் அவைகளில் ஈரம் தங்காமல் சீக்கிரத்தில் வறண்டுபோகும் தன்மையிருப்பதால் நீர்ப்பாய்ச்சலில் அதிகச் செலவு நேரிடும்.

குருமண்.—என்று சாதாரணமாய் வழங்கும் நிலம் களிமண்ணும் சுண்ணும்பும் மணலும் கலந்தது. அதன் நிறம் வெண்மையாயிருக்கும். சில சமயத்தில் களிமண் பாகம் மழையிலும் வெள்ளத்திலும் கரைந்து அப்புறப் பட்டுப்போய் மீந்த பாகம் மணலும் சுண்ணும்புங் கலந்ததாயுமிருக்கும். இந்த நிலங்களில் சில சமயங்களில் களியும் சுண்ணும்பும் மழையில் கரைபட்டுப் போக மீந்தது வெண்மணலாகவுமிருக்கும். அப்படியிருந்தாலும் முன்

அதில் அதிகமாய்க் கலந்திருந்த களி, சுண்ணும்பு இவ்வஸ்துக்களின் சத்து அந்த நிலத்தில் கொஞ்சமாவது இல்லாமல் போகாது. அதனுல் இவைகளைக் தருமண் என்று தெரிந்துகொள்ளலாம்.

படுகை நிலம்.—ஆற்று வண்டல், வெகு காலமாகப் படிந்த மண்ணும் மணலும் கலந்ததாக இருக்கும் இலகுமண். இதில் கந்தமூலவர்க்கப்பொருள் அதிகமாகக் கலந்துமிருக்கும். அப்படி யிருந்தால் அது தோட்டப்பயிர் செய்வதற்கு லாய்க்காயிருக்கும். ஏனென்றால் அதின் அடிமண் படைமணலாக இருக்கும். அதில் தண்ணீர் கட்டித் தேங்காமல் எளிதில் வடிந்துபோகும்.

செவ்வல் நிலம்.—இதில் சிலவிடங்களில் களி அதிகமாகவும் சிலவிடங்களில் மணல் அதிகமாகவும் கலந்திருக்கும். இந்த நிலங்களில் இரும்பு சத்து அதிகமாயிருப்பதால் இவைகளுக்கு சிவப்பு நிறமுண்டாகிறது. களிக்கொண்ட நிலமாயிருந்தால் அதற்கு களிச்சேவ்வல் என்றும், மணல் அதிகமாயிருந்தால் அதற்கு மணற் சேவவல் என்றும் பெயர். களியும் மணலும் சமமாய்க்கலந்திருந்தால் அது பசளைச்சேவ்வல் ஆகும். அதுவே தோட்டப்பயிர் செய்வதற்கு அதிக உபயோகமான நிலமெனச்சொல்லலாம். இந்த மூன்றுவிதச் செவ்வல் நிலங்களுக்கும் அடிமண் படை கூழாங்கற்கள் நிறைந்த சரளை மண்ணுயிருக்கும். இதனுல் இந்தவகை நிலங்களில் மழைகாலத்தில் சதசதப்பு உண்டாகாமல் தண்ணீர் எளிதில் வடிந்துபோகும்.

மணற்பாங்கு நிலங்களில் நன்ருய் மக்கிச்செமித்த தொழு எருவையும் தழை யெருவையும் போட்டு விர்த்திசெய்யலாம். பசுந்தாள் எருப்பயிர்களை விதைத்துண்டாக்கி நிலத்தில் உழுதுவிடுவதாலும் அவைகள் விர்த்தியாகும். களிமண் நிலத்தில் அதை இலகுவாகக்கூடிய எந்த வஸ்துவையும் கலந்து விர்த்தி செய்யலாம். குப்பை எரு, சாம்பல், குளைமண், குதிரைலத்தி முதலான எல்லா வஸ்துக்களையும் போட்டு விர்த்திசெய்யலாம். மேலும் இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒருமுறை கொஞ்சம் புதிதாய் நீற்றிய சுண்ணும்பையும் போடுவதால் பிரயோஜனமுண்டு.

தண்ணீர் எளிதில் வடியாத சதசதப்புள்ள நிலங்களில் நீர் வடியத்தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அந்த நிலங்களில் ஊடேயூடே சற்று ஆழமான நீண்ட கிடங்குகளைத் தோண்டி வைக்கவேண்டும். தண்ணீர் கட்டும் காலங்களில் நிலத்தின்மேலிருந்து தண்ணீர் வடிந்து போவதுமன்றி, மண்ணில் ஊறியிருக்கும் தண்ணீரும் அந்தக் கிடங்குகளில் வடிந்துவிடும். நிலத்தில் குறுக்கிலும் நெடுக்கிலும் கிடங்குகள் தோண்டி அவைகளில் மண்ணிஞல்செய்த குழாய்களைப் பதித்து அவற்றின்மேல் கூழாங்கற்களை அரையடி உயரத்துக்கு நிறப்பி மண்ணிஞல் மூடிவிட்டால் அடிமண்ணில் தங்கியிருக்கும் தண்ணீர் இந்தக் குழாய்களில் வடிந்து அவைகளின் வழியாய் நிலத்தைச் சுற்றித் தோண்டியிருக்கும் வடிவுகால்களில் வடிந்துவிடும். இந்த ஏற்பாடு மெத்த விசேஷமானது.

உரப்பான நிலத்தில் மண் ஒட்டும்படி ஈரமாயிருக்கும்போது உழவு நடத்தக்கூடாது. அந்தச்சமயத்தில் நிலத்தின்மேல் ஜனங்கள் நடந்தாலுங்கூட மண் வலுவடைந்து கெட்டியாய்விடும்.

தோட்டப்பயிர் செய்ய உத்தேசிக்கும் நிலங்களில் குறைந்தது இரண்டடி ஆழத்துக்காவது மண்கண்டம் இருக்கவேண்டும். அதில் கொஞ்சம் சரளைக்கற்கள் கலந்திருந்தால் மெத்த நன்மைதான். நிலத்தின் மேற்பரப்பில் இருக்கும் பசளை மண் ஈரமாயிருக்கும்போது கையில் எடுத்துப் பிசைந்தால் சரசரப்பாயிருக்கக்கூடாது. மெழுகு மண்ணுயிருக்கவேண்டும்.

பழமொழிகள்
OLD SAYINGS II

சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனல்
உழன்றும் உழவே தலை.

எங்கெங்கும் போய் அலைந்து திரிந்து வந்தாலும் உலகத்தவர்கள் எல்லாரும் ஏரின் பின்னே போகவேண்டியவர்களே. உழவு தொழிலானது அதிக வருத்தத்தைக் கொடுப்பதாயினும் எல்லாவித ஜீவனங்களைவிட மேன்மையானது. இதற்குக் காரணத்தை நாயனர் வேறு சில குறள்களினல் நிருபித்திருக்கிறர்.

இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர்
கரவாது கைசெய்து ஊண்மாலை அவர்.

கிருஷிகர் மற்றத்தொழில் செய்பவர்களிடத்தில் ஒன்றையும் விரும்ப வேண்டியதில்லை. ஆனல் ஆகார தானியங்களைத் தாங்களேபாடுபட்டு விளைவித்துத் தங்களை யாசிப்பவர்களுக்குக் கிருஷிகர் கொடுப்பார்கள். ஆகையால் தங்கள்ஜீவனத்துக்கு வேறுஒருவரையும் எதிர்ப்பார்க்காமல்,உலகத்தவர்கள் தங்களை எதிர்ப்பார்க்கும்படி இருப்பவர்கள் மேலானவர்கள் அல்லவா?

கிருஷிகருக்கு உண்டாகும் செல்வம் நிலையுள்ளது. நிலம் விளைந்தால் அவர்களின் ஸ்திதியையும் அவர்களின் குடும்பச் செழிப்பையும் யாருக்குத்தான் ஒப்பிடலாம். அப்படி நிலம் விளையாமல் போனலும் கிருஷிகருக்கு உண்டாகும் நஷ்டம் அதிகப் பெரியதல்ல. கிணற்றிறவையைக்கொண்டு கொஞ்சம் உணவு தானியத்தையாவது விளைவித்துத் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் கால் நடைகளையும் காப்பாற்றிக் கொள்ளுவார்கள். வியாபாரிகளுக்கு நஷ்டமுண்டானல் அவர்கள் அடியோடு கெட்டுப்போவதை நாம் பார்க்கிருேம். மற்ற ஜீவனங்களிலும் இவ்விதமான நிலையில்லாமை யென்னும் விபத்து அதிகமாய் உண்டு.

குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஒநூர் நண்ணினும் நண்ணுவர்.

என்பது இவ்விதமான ஜீவனம் செய்பவருக்கேயன்றி கிருஷிகருக்குச் சாதாரணமாய்ப் பொருந்தாது.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கோப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

கைத்தொழில் செய்பவர்களில் அனேகருக்குக் கிருஷிகரால் விளைவிக்கப்பட்ட விளைபொருட்கள் ஆதாரமாயிருக்கிறது. கோதுமையைக்கிருஷிகர் விளைவிக்க, அதை மாவாக அரைப்பவரும், ரொட்டி செய்பவரும், அதை விற்பவரும் ஆக அனேகர் அவர்களை யொட்டி ஜீவிக்கின்றனர்.

சர்க்கார் உத்தியோகங்களில் எவ்வளவு உன்னதமான பதவியிலுள்ளவர்களும் தங்களுக்கு ஏற்பட்ட எஜமான் ஒருவனுக்குக் கீட்படிந்து நடக்கக் கடமைப்பட்டவர்களாயிருப்பார்கள். கிருஷிகர் அப்படியின்றிச் சுவாதீனமுள்ளவர்களென ஒருவாறு சொல்லலாம். இதனலேயே நாயனர்,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

என்னும் குறளில் உண்மையான வாழ்வு கிருஷிகருடையதுதான் என்பதை விளக்கியிருக்கிறர்.

நெல் ஒற்றைநாற்று நடுகை

SINGLE PLANTING OF PADDY SEEDLINGS

கொஞ்சக்காலமாக விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் நெல்நடுகை செய்வதில் ஒற்றைநாற்று நடும்முறையை அநுஷ்டிக்கும்படி கிருஷிகருக்கு யோசனை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணாநதி தீரத்தில் இம்முறை தற்காலத்திலும் வெகுகாலமாகவும் சாதாரணமாய்அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்விராஜதானியிலேயே இங்குள்ள நெல்பயிரைவிட மேன்மையான பயிர் வேறு எங்கும் காண்பது துர்லபம். திருநெல்வேலி ஜில்லாவிலும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள (காவேரிநதி) தீரத்திலும் ஒற்றைநாற்று நடுகையானது அநுஷ்டானத்துக்கு வந்துவிட்டது. இவ்விரண்டு ஜில்லாக்களிலும ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல்நாற்று இவ்விதமாய் நடுகையாகிறது. இவ்விராஜதானியின் தென்பிராந்தியத்தில் சம்பாப்பிசானக்காலத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் தினுசுகளில் 10-தினுசுகள் சென்ற பிசானத்தில் ஒற்றைநாற்று நடுகையாகிப் பயிராயின. ஜீரகச் சம்பா என்னும் தினுசுமட்டும் சாதாரணமாகக் குறைந்த மேனிகாணும். என்றாலும் அந்தநெல் அதிக மேன்மையானது. ஆகையால் அதில் விளைவாகும் மேனித்தாழ்வை அதன் மேன்மை சரிப்படுத்துகிறது. இந்த ஒரு தினுசைத் தவிர மற்றவைகளெல்லாம் கிருஷிகரால் சாதாரணமாய் நடும் விதமாய்ப் பயிர் செய்யப்பட்ட உள்ளூர் சம்பாத்தினுசுகளின் விளைவைப் பார்க்கிலும் அதிக மேனி தந்தன. 9-தினுசுகளை கிருஷிகர் சாதாரணமாய்ப் போடுகிற எருப்போட்டு ஒற்றைநாற்று நடுகைசெய்து பயிரிட்டதில் அவர்களுக்குக் கிடைத்த மேனியில் சராசரியில் ஒன்றரை மடங்கு மேனி கண்டது. ஆனால் ஒற்றைநாற்று நடுகை செய்வதின் பயன் இது மட்டுமல்ல. அநேக நாற்றுகளைச் சேர்த்து கற்றை கற்றையாக நட்ட பயிரில் சேகரித்த விதையைவிட ஒற்றைநாற்று நடுகை செய்யப்பட்ட பயிரில் சேகரிக்கப்பட்ட விதை அதிக மேன்மையானதென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணமென்று எளிதில் கண்டறியலாம். கற்றை கற்றையாய் நடும்போது அப்படி சேர்த்து நடுகைசெய்த 15 முதல் 20 வரையுள்ள நெல் செடிகளுக்குக் கிடைக்கும் இடமும் மண்ணும் எருவும், தனிநாற்று நடுகை செய்யும்போது ஒரு செடிக்குக் கிடைக்கிறது. ஆகையால் சேர்த்து நடப்பட்டு ஒன்றுடன் ஒன்று நெருக்குண்டு நிலைத்திருக்கவும் இடமில்லாது வருத்தமடையும். 15-முதல் 20-செடிகள் ஈனும் தானியத்தைப் பார்க்கிலும் மேன்மையான தானியத்தைத் தனியாய் நடப்பட்டுத் திறமாய் வளர்ந்து வரும் பயிர் விளைவிக்கும் என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். இதுமட்டுமல்ல; அப்படித் தனிநடுகை செய்யப்பட்ட பயிரில் விளைந்த வித்திலிருந்துண்டாகும் நாற்றை நட்டால் அந்தப் பயிருக்கு அந்த விதையை விளைவித்த பயிருக்கு என்னென்ன விசேஷ குணங்களுண்டோ அந்தக் குணங்களெல்லாம் தானே உண்டாகும். விதையை விளைவித்த பயிரானது சரியாய் பக்கம் வைத்து மூடுகட்டி யிருந்தால், அவ்விதையிலிருந்துண்டாகும் பயிருக்கு பக்கம்வைத்து மூடுகட்டும் சுபாவம் அதிகமாய் உண்டாகும் இதனால் அந்தப் பயிரின் விளைவும் அதிகப்படும். பாலூர் விவசாயப்பண்ணையில் இவ்விஷயம் முன்னமே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 1907-08 வருஷத்தில் 16-வெவ்வேறு துண்டுகளில் நடுகை செய்த கருடன் சம்பாப்பயிரில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியில் 1952-இராத்தல்

(சுமார் 650-பக்கா) நெல் விளைந்தது. 1908-09-ம் வருஷத்தில், அதே வயல்களில் அந்த விதமாகவே எருவிட்டுப் பயிரிட்டதில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியில் 2264-இராத்தல் (755-பக்கா) வீதம் விளைவாயிற்று. இந்தப் பயிரின் நாற்றுக்கு உபயோகித்த விதையானது முன் வருஷத்தில் ஒற்றை நாற்று நடுகைசெய்த பயிரிலிருந்து விசேஷமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டது. இப்படி ஏக்கர் ஒன்றுக்கு 312-இராத்தல் (105-பக்கா) அதிகமாய் விளைவானதற்குக்காரணம் விசேஷமாய் விர்த்தி செய்யப்பட்ட வித்து என்றே சொல்லவேண்டும். ஏனென்றால், மற்றெல்லா விஷயங்களிலும் இதற்கும் மற்றப் பயிர்களுக்கும் யாதொரு பேதமுமில்லை.

மேல் சமுத்திரக் கரையைத் தவிர மற்ற எந்த இடங்களிலும் கார் நெல்தினுசு நடுகையில் நடத்திய பரிக்ஷைகள் மிகக் குறைவு. அங்கே முதல் முதல் பரிக்ஷித்த நெல் தினுசுகளில் பக்கத்தாள்கள் அநேகமாய் உண்டாகவே இல்லை. இந்தத் தினுசுகளில் சென்ற மூன்று வருஷங்களாய் இப் பரிக்ஷை நடத்தப்பட்டு வருகிறது. சென்ற இரண்டு வருஷங்களாக ஒற்றை நாற்றுநடுகைசெய்த பயிரிலிருந்து விதை வேறாக சேகரித்துவைத்து உபயோகிக்கிறார்கள். முதல் வருஷத்தில் ஒவ்வொரு முதலிலும் ஒன்று, அல்லது எங்கேயாவது ஓரிடத்தில் இரண்டு, பக்கத்தாள்கள் உண்டாயிருந்தன. இரண்டாம் வருஷத்தில் நட்ட முதல்களில் அநேகத்தில் 3-பக்கத்தாள்கள் உண்டாயிருந்தன. மூன்றாம் வருஷத்தில் ஏறக்குறைய எல்லா முதல்களிலும் 5-பக்கத்தாள்களும், சில முதல்களில் ஐந்து பக்கத்தாள்கள் வரையிலும் உண்டாயிருந்தன. தற்காலத்தில் ஒற்றை நாற்று நடுகைப் பயிரின் மாசூலை விட மூன்று அல்லது நான்கு நாற்று முதல்களை ஒன்றாய்ச் சேர்த்து நடுகை செய்த பயிரிலிருந்து அதிமான மாசூல் கிடைத்திருக்கிறது. என்றாலும் பக்கம் வைத்து மூடுகட்டும் சக்தி விர்த்தி அடைய அடைய ஒற்றை நாற்று நடுகைப்பயிரின் மாசூல் அவ்விடத்தில் சாதாரணமாய்ச் செய்யும் நடுகைப்பயிரின் மாசூலைவிட இப்போதே அதிகமாய் இருப்பதுமன்றி, 3, 4 நாற்று முதல்கள் சேர்த்து நட்ட பயிரின் மாசூலுக்குக் கிட்டத்தட்ட சரியாயிருக்கிறதென்று எண்ணும்படி விர்த்தியடைந்து வருகிறது.

நெல் சாகுபடியில் ஒற்றை நாற்று நடவேண்டுமானால் நாற்றங்கால்களில் அதிக நெருக்கமாய் விதைவிடக்கூடாது. ஒரு ஏக்கர் நடுவதற்கு, 17-செண்டு விஸ்தீரணமுள்ள நாற்றங்காலில் 7-பட்ணம்படி நெல் விதை விதைத்தால் போதுமானது. கூடுமானால் "சேற்று நாற்று"க்குப் பதிலாக "புழுதி நாற்று"விடும் முறையை அநுசரிக்கவேண்டும். மேலும், நாற்று முளைத்தவுடனே திடமாய் வளர்ந்தோங்கி வரும்பொருட்டு நாற்றங்கால்களில் நன்றாய் மக்கின தொழு எருவும் (மாட்டுச்சாணியும்) சாம்பலும் போடவேண்டும். நடும் நாற்று அதிகமாய் முதிர்ந்துபோக விடக்கூடாது. பயிரின் வயதுக்கு நடும் நாற்றின் வயது மாதம் ஒன்றுக்கு 7-நாள் வீதம் இருக்க வேண்டும். உதாரணமாக பயிரிடப்படும் நெல் 5-மாதப் பயிரானால், நடும் நாற்று 35-நாட்களுக்கு அதிகமாய் முதிர்ந்திருக்கக்கூடாது.

முதல்முதல் நடுகையாட்களை ஒற்றை நாற்று நடச்செய்வதில் கொஞ்சம் பிரயாசமாயிருக்கலாம். ஆகையால் அவர்கள் அப்படி நடப்பழகும் வரையில் ஜாக்கிரதையாய் மேல்பார்த்து வரவேண்டியது அவசியமாகும். என்றாலும், மேலே விவரித்திருக்கிறபடி நாற்றங்கால்களில் நாற்றுண்டாக்கினால், நாற்று திடமாய் வளர்ந்திருக்கும். அவைகளை ஒவ்வொரு முதலாய்ப் பிரித்தெடுப்பதில் அவ்வளவு பிரயாசமிருக்கமாட்டாது.

எவ்வளவு இடைவிட்டு நடுகைபோடவேண்டும் என்பதைக் கிருஷிகர் தாங்களே யோசித்துத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு 1000-பட்ணம்படி நெல்லுக்குமேல் விளைவாகும் நிலத்தில் சாணுக்கு ஒருநடுகையும், ஏக்கர் ஒன்றுக்கு 750-படி விளைவாகும் நிலத்தில் முக்கால்சாணுக்கு ஒரு நடுகையும் ஏக்கர் ஒன்றுக்கு 500-படியும் அதற்குக்குறைந்தும் விளைவாகும் நிலத்தில் அரைச்சாணுக்கு ஒருநடுகையும் ஒருவேளை சரியாயிருக்கலாம். வேளாவேளைகளில் சாதாரணமாய் ஏக்கர் ஒன்றுக்கு 1500-படி நெல் விளைவாகும் கொழுத்த பூமியில் இரண்டு சாணுக்கு ஒரு நடுகை போட்டாலும் நன்மையாகும். அதிகக் கேவலமான நிலங்களிலோ ஒற்றைநாற்று நடுகை செய்வதில் இலாபம் இருக்கவேமாட்டாது. இவ்விஷயத்தில் இதற்கதிகமான யோசனையை விவசாய இலாகாதார்கள் சொல்லமுடியாது. ஏனென்றால் அனேகமாக அது நெல் தினுசுக்குத் தக்கதாகவும், நாற்றின் தன்மைக்குத் தக்கதாகவும், ஒற்றை நாற்று நடுகைப் பயிரிலிருந்து எடுத்த விதை விதைக்கப்பட்டதோ இல்லையோ என்பதற்குத் தக்கதாகவும் இருக்கும்.

எச். சி. சாம்ப்சன்,
விவசாய டிப்டி டைரெக்டர்.

சிறுநீர் சேகரிக்காததாலுண்டாகும் நஷ்டம்

WASTE FROM NEGLECT TO PRESERVE URINE

இத்தேசத்தில் கிருஷிகருக்கு கிடைக்கக்கூடிய எருவகைகளையாவது அவர்கள் சரியாய்ச் சேகரித்து உபயோகப்படுத்துகிறார்களாவென்பதை யோசிக்கும்போது, எருவகைகளில் அனேகத்தை யவர்கள் சரியாய் உபயோகப்படுத்துவதில்லையென்று வெளியாகிறது. அப்படி நஷ்டமாகிற ஒரு வஸ்துவைப்பற்றி இம்முறை கவனிப்போம். அது யாதெனில் ஜீவஜந்துக்களின் சிறுநீர்தான். இதை வாசிக்கும் நமது நண்பர்கள் ஒருவேளை இதைப்பற்றி நகைப்பார்கள். சிறுநீர் எவ்வளவு கேவலமான பொருள்! அதைப்பற்றி அதிக சிலாக்கியமாய் நாம் பேசினால் அது நகைப்பையுண்டாக்குமல்லவா? முதலில் நகைப்புண்டானாலும், நமது நண்பர் இவ்விஷயத்தை நன்றாய்ச் சிந்திக்கும்போது அதன் உபயோகம் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

முதல் முதல் நாம் விவசாய வேலைகளுக்கும் வீட்டு உபயோகத்துக்காகவும் வைத்திருக்கும் கால்நடைகளின் சிறுநீரைப்பற்றிக் கவனிப்போம். போசிங்கால்ட் என்னும் சாஸ்திர நிபுணர் ஒருபால் பசுவால் கழிக்கப்பட்ட சிறுநீரைத் திட்டமாய்க் கணக்கிட்டுப்பார்த்து அது ஒரு வருஷக்காலத்தில் 10,000 இராத்தல் நிறையுள்ள (2500-பட்டணம்படி அளவுள்ள) சிறநீரைக் கழித்ததாக எழுதியிருக்கிறார். இந்தத் தேசத்திலுள்ள சாதாரணக் கால்நடைகளில் ஒவ்வொன்றும் ஒரு வருஷத்தில் 4000-இராத்தலுக்கு (1000-பட்டணம் படிக்கு)க் குறையாத சிறுநீர் விடுகின்றனவெனக் கணக்கிட்டிருக்

கிறார்கள். இது தற்காலத்தில் சேகரிக்கப்படுவதில்லை என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால், அதனால் உண்டாகும் நஷ்டம் எப்படிப் பட்டதென்று மட்டும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியாது.

சரீரத்தைப் போஷிப்பதற்காக ஒவ்வொரு நாளும் ஜீவ ஜெந்துக்கள் உட்கொள்ளும் உணவில் அதிகப் பாகம் சரீரத்திலுள்ள இரத்தமாகி, தசை, எலும்பு, மூளை, கொழுப்பு, உரோமம், தோல் முதலியவைகளை வளரச் செய்கிறது. மீந்த பாகம் மலஜலங்களாகக் கழிவாகிறது. ஆகையால் ஜீவ ஜெந்துக்கள் உண்ட உணவிலடங்கிய சில வஸ்துக்கள் சிறு நீரில் இருக்கின்றன. ஜீவஜந்துக்களின் உணவுப்பொருள்கள் எல்லாம் நிலத்திலிருந்து விளைகின்றனவாகையால், சிறுநீரை நிலத்தில் கொட்டினால் அதிலிருந்து விளைபொருள் ரூபமாய் எடுக்கப்பட்ட வஸ்துக்கள் திரும்ப நிலத்தில் போய்ச் சேரும். இதனால் பொதுவாகச் சிறு நீரின் உபயோகத்தை அறிந்துகொள்ளலாம்.

கால்நடைகளின் சிறு நீரை ரசாயன சாஸ்திரப்படி பரிக்ஷித்துப் பார்த்ததில் அதில் சுத்த ஜலம் 100-க்கு சுமார் 91-பாகமும், மூலப்பொருள்கள் சுமார் 6 பாகமும், தாதுப்பொருள்கள் சுமார் 3-பாகமும், இருக்கின்றன. மேற்காட்டிய மூலப்பொருட்களில், அம்மோனியா என்னும் வாயுவிருக்கிறது. இதுசிறுநீரில் 100-க்கு சுமார் 2-மடங்கு எனக் கணக்கிடுகிறார்கள். அம்மோனியாவில் நைட்ரோஜன் என்னும் வெடியுப்பு வாயுவடங்கியிருக்கிறது. அதுபயிர்களுக்குப் பிராணாதாரமான உணவு. ஒரு எருவில் இந்த வஸ்து இல்லையானால் அந்தப் பயிர் செழிப்பாய் உண்டாகாது. எருப்பொருள்களில் அடங்கியிருக்கவேண்டிய முக்கியமான 3-பயிருணவு வஸ்துக்கள் என்னவென்றால்:—

1. நைட்ரோஜன் என்னும் வெடியுப்புவாயு,
2. போட்டாஷ் என்னும் சாம்பல் காரம்,
3. பாஸ் பாரிக் ஆசிட் என்னும் பிரகாசதாமிலம்.

இவைகளில் முதற்சொன்ன வெடியுப்பு வாயு மேற்காட்டியபடி சிறுநீரில் 100-க்கு இரண்டு மடங்கு அடங்கியிருக்கிறது. இரண்டாவதான சாம்பல் காரமும் 100-க்கு 2-மடங்கிருக்கிறது. மூன்றாவதான பிரகாசதாமிலம்மட்டும் இல்லை. அதில்லாமற்போனாலும் மற்ற இரண்டு வஸ்துக்கள் மிக உபயோகமுள்ளவைகள். தானியங்களில் சிறந்ததான கோதுமையில் 100-க்கு 3-மடங்கு அம்மோனியாவும், 5-மடங்கு சாம்பல்காரமும் 8-மடங்கு பிரகாச தாமிலமும் அடங்கியிருக்கின்றன. அரிசியில் இவ்வஸ்துக்கள் ஒவ்வொன்றும் 100-க்கு ஒரு மடங்குதானிருக்கின்றன. ஆகையால் இந்தப்பயிர்களுக்குக் கால் நடைகளில் சிறுநீர் எவ்வளவு உபயோகமுள்ள வஸ்துவென்பது வெளியாகும். ஒவ்வொரு மாட்டுக்கும் வருஷம் ஒன்றுக்குச்சுமார் 30-இராத்தல் நிறையுள்ள அம்மோனியாவும், 30 இராத்தல் நிறையுள்ள சாம்பல் காரமும் நஷ்டமாகிறது.

இவ்விராஜதானியிலுள்ள கால் நடைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, எத்தனை இலக்ஷம் டன் நிறையுள்ள அம்மோனியாவும் சாம்பல்காரமும் வருஷா வருஷம் நஷ்டமடைகின்றன வென்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

கிருஷிப்பழக்கங்களை மாற்றல்
NECESSITY FOR CHANGE IN AGRICULTURAL PRACTICES
தேவாரமெட்டு

1. கேட்டீரோ கிருஷிகரே! கேடுறுநுங் காலகெதி?
மாட்டீரோ நும்முறைகள் மாற்றுதற்கே மனமிசைய?

2. நிலவளமும் நீர்வளமும் நிறைந்திருக்கும் நீள்தேசம்
மலைவளமும் குடிவளமும் மலிந்ததென மகிழ்வுறுவார்.

3. சித்திரைதை மாசியுமே சிறந்தபட்டம் தனித்தனியே
வைத்ததிரு வைகாசி வாய்த்தாக்கால் நலமென்பார்

4. ஆடியிலே தேடிவிதை அதில்நன்மை அதிகமெனக்
கோடிதரம் கூறிமிகக் கொண்டாடும் பலருமுளர்.

5. பொன்னுருக வெயில்காயும் புண்ணியசீர் புரட்டாசி
மின்னலுடன் மண்ணுருக மேலான மழைபொழியும்.

6. ஆர்த்தார்த்தங் கைப்பசியில் அழுகைத்தூறல் பெய்யும்
கார்த்திகையில் கல்லுருகக் கனமழைகள் பொழியுமென்பர்.

7. காலமழை கோடைமழை சாரல்மழை கடும்பனிமுன்
ஞாலமதில் மாதமுமும் மாரிபெயு மெனநவில்வர்.

8. இக்காலங் கலிகாலம் இயல்பான மழைபெய்வ
தெக்காலம் என்றறியா தேங்கிமனம் வாடுகிறோம்.

9 ஒருசமயம் முன்கூட்டி ஓயாமல் வருஷிக்கும்.
தருணமது தக்கதென்று தாவிவிதைத் திடுவார்கள்.

10. காலத்தில் பின்மழைகள் கடுகளவும் பெய்யாமல்
ஞாலத்தில் பயிர்வாடி நஷ்டமுண்டாக் குவதுண்டு.

11. தென்னாட்டில் கன்னலுடன் செந்நெல்லும் விளைவடைய
முன்னாட்டி நிலமுழவே முடிவதில்லை முன்போல.

12. வைகாசிப் பருவத்தில் வயலில்நெல் விதைப்பதற்கும்
செய்காலில் நாற்றுவிடச் செய்வதற்கும் பெய்வதில்லை.

13. ஆற்றுக்கால் ஏரிகுளம், அவற்றில்நீர் நிறைந்தபின்னே
சேற்றுக்கால் நாற்றுவிட்டு செழுந்தொழிலில் நடுவார்கள்.

14. அதனாலே கதிரீனும் அத்தருணம் நீர்குறைந்து
பதமழையும் பெய்யாமல் பரிதவிப்பர் பாரினிலே.

15. வாடியுமே வயல்களில்நீர் வரண்டுபயிர் வருந்திமிகப்
பாடுகண்டு தீவடைந்து பலனற்றுப் போமையோ!

16. தாமதித்தும் தரங்குறைந்தும் தங்குமழை சற்றுமின்றிப்
போமதுவே காரணமாம் பொதுவாக இக்குறைக்கே.

17. விசும்பினின்று மழைத்துளிகள் வீழினல்லால் வியனுலகில்
பசும்புல்லும் பயிர்முளையும் பார்க்கரிதென் றேபகர்வர்.

18. தண்ணீர்தான் தண்பயிர்க்குத் தகுஜீவ தாரகமாம்
எண்ணியிட்ட எருவும்நீர் இல்லையெனில் என்னாகும்?

19. ஆகையினால் நீர்செய்ய அவசியமா னதுகேளும்
ஊகமுடன் கிணறுகளை உமதுநிலங் களில்தோண்டும்.

20. வாடுங்கால் அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதிலும்
பாடுபட்டு நீரிறைத்துப் பயிரைநீர் காத்திடலாம்.

21. அறுவடைக்கிங் கறுமாதம் ஆகும்ஆ னைக்கொம்பன்
சிறுமணியன் சம்பாவாம் சென்னெல்லைச் சிதறாமல்.

22. மூன்றாம்அல் லதுநான்காம் மாதத்தில் முற்றிவிடும்
